சுருக்கம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – நான்கு மண்டல கண்காணிப்பு பிரிவுகளுடன், கூடுதல் காவல்துறை இயக்குநர் அவர்களின் தலைமையின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் இயங்கும் சமூக நீதி மற்றும் மனித உரிமைப்பிரிவுகளையும், அவர்களின் பணிகளுடன் கூடுதலாக பழங்குடியினச் சாதிச்சான்றிதழ் மெய்த்தன்மை அறிதல் தொடர்பான பணிகளை மேற்கொள்ளுதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (சா.மெ 1) துறை**

அரசாணை (நிலை) எண். 50

நாள்: 28.07.2017
**ஹேவிளம்பி வருடம், ஆடி மாதம் 12–ம் நாள், திருவள்ளுவர் ஆண்டு 2048.**

படிக்க:

1. உச்ச நீதிமன்றம் உரிமையியல் மேல்முறையீடு எண்.5854/94 நாள் 2.09.1994.
2. அரசாணை (2ப) எண். 108, ஆதி(ம) ப ந துறை, நாள் 12.09.2007.
3. அரசாணை (நிலை) எண். 106, ஆதி(ம) ப ந துறை, நாள் 15.10.2012.
4. அரசாணை (நிலை) எண். 38, ஆதி(ம) ப ந துறை, நாள் 12.05.2017.

------

ஆணை :–

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட உச்சநீதிமன்ற உரிமையியல் மேல்முறையீடு ஆணையின் அடிப்படையில், Scheduled Caste சாதிச் சான்றுகளின் மெய்த்தன்மையினை சரிபார்க்க மாவட்ட அளவிலான மாவட்ட விழிப்புணர்வுக் குழுக்களையும் (District Level Vigilance Committee), Scheduled Tribe சாதி சான்றுகளின் மெய்த்தன்மையினை சரிபார்க்க மாநில அளவிலான கூர்நோக்குக் குழுவினையும் (State Level Scrutiny Committee) அமைத்து மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணை வாயிலாக ஆணையிடப்பட்டுள்ளது.

2. இதனைத் தொடர்ந்து, மேலே மூன்று மற்றும் நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில் Scheduled Caste மற்றும் Scheduled Tribe சாதிச்சான்று மெய்த்தன்மை தொடர்பான விசாரணை அறிக்கைகளை மாவட்ட கண்காணிப்பு விசாரணை குழு, இயக்குநர், பழங்குடியினர் நலம் அவர்களுக்கு அளிக்கும் பொருட்டு சென்னை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய தலைமை இடங்களில் நான்கு மண்டல Scheduled Caste மற்றும் Scheduled Tribe கண்காணிப்பு விசாரணைப் பிரிவுகள் (Scheduled Castes/Scheduled Tribes Vigilance Cell) தோற்றுவிக்கப்பட்டன.

3. Scheduled Tribe சாதிச்சான்றிதழ் மெய்த்தன்மை அறிதல் தொடர்பாக, கல்வி நிலையங்கள், பணி புரியும் அலுவலகங்கள், பணி நியமன நிறுவனங்கள் மற்றும் சாதிச்சான்றிதழ்

வழங்க நீதிமன்றம் வாயிலாக மெய்த்தன்மை கண்டறிவதற்காக பெறப்பட்ட 3,251 சாதிச்சான்று கோப்புகள், மாநில அளவிலான கூர்ந்தாய்வுக் குழுவிடம் தற்போது நிலுவையிலுள்ளன. நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்ற ஆணைகளுக்கிணங்க அனைத்து Scheduled Tribe சாதிச்சான்று மெய்த்தன்மை தொடர்பான இனங்களும் கள ஆய்வு மேற்கொள்ளும் பொருட்டு கண்காணிப்பு விசாரணை பிரிவுகளுக்கு அனுப்பப்பட வேண்டும். தற்பொழுது உள்ள 4 மண்டல கண்காணிப்பு பிரிவுகளை கொண்டு, மேற்காணும் 3,251 இனங்களை கள ஆய்வு செய்து, சாட்சிகளை விசாரித்து, ஆவணங்களை பெற்று, அறிக்கை தயார் செய்து மெய்த்தன்மை அறிய நீண்ட காலமாகும். இதனால், கல்வி நிலையங்களில் பயிலும் மாணாக்கர்கள், பணியில் சேர்வதற்காக காத்திருப்பவர்கள், பணியில் உள்ளவர்கள் மற்றும் பணி நிறைவு செய்ய காத்திருக்கும் பணியாளர்கள் பாதிக்கப்படுவார்கள். இதனை அரசு கவனமுடன் ஆய்வு செய்து மாநில கூர்நோக்கு குழுவில் தற்போது நிலுவையிலுள்ள 3,251 Scheduled Tribe சாதி சான்றிதழ்களை முடிவு செய்தல் தொடர்பாக ஏற்கனவே மெய்த்தன்மை கண்டறியும் 4 மண்டல கண்காணிப்பு விசாரணை பிரிவுகளுடன், கூடுதல் காவல்துறை இயக்குநரின் தலைமையின் கீழ் இயங்கும் 38 (31 பிரிவுகள் மாவட்டங்களிலும் 7 பிரிவுகள் மாநகரங்களிலும்) சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவைச் சார்ந்த அலுவலர்கள் தங்கள் பணிகளுடன் கூடுதலாக Scheduled Tribe சாதிச்சான்றுகளின் மெய்த்தன்மையை சரிபார்த்தல் தொடர்பாக கள ஆய்வு பணியினையும் மேற்கொள்ள அறிவுறுத்தலாம் எனவும், இவர்கள் தமது பணியுடன் கூடுதலாக Scheduled Tribe சாதிச்சான்றிதழ்களை கள ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கும் பணியினையும் மேற்கொள்வதால் கண்காணிப்பு விசாரணைப் பிரிவு / கண்காணிப்பு விசாரணை அலுவலராக அழைக்கப்படுவர் எனவும், கண்காணிப்பு விசாரணை அலுவலர்கள் மனுதாரர் குறித்து நேரிடையாக கள ஆய்வு மேற்கொண்டு அறிக்கையினை இயக்குநர், பழங்குடியினர் நலம் அவர்களுக்கு அளிக்கவும், பழங்குடியின நல இயக்குநரிடமிருந்து பெறப்படும் பரிந்துரையைத் தொடர்ந்து, மாநில கூர்நோக்கு குழு, தனியரை விரிவான விசாரணைக்கு உட்படுத்தி அவரின் Scheduled Tribe சாதிசான்று மெய்த்தன்மை தொடர்பாக இறுதி முடிவெடுக்கலாம் எனவும் இத்துறை கருதியது.

4. மேற்காணும் இத்துறையின் செயற்குறிப்பிற்கு உள் (காவல்) துறையானது இசைவளித்துள்ளது. அதனடிப்படையில், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவின் 38 (31 பிரிவுகள் மாவட்டங்களிலும் 7 பிரிவுகள் மாநகரங்களிலும்) பிரிவுகளில் பணியாற்றும் காவல்துறை அலுவலர்கள், நிலுவையில் உள்ள 3,251 Scheduled Tribe சாதிசான்று சரிபார்த்தல் பணியினை அவர்கள் தற்போது பார்க்கும் பணிகளுடன் கூடுதலாக மேற்கொள்ள அரசு ஆணையிடுகிறது.

<u>கண்காணிப்பு விசாரணை பிரிவுகள் மற்றும் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு அலுவலர்கள் ஒன்றாக இணைந்து மேற்கொள்ள வேண்டிய பணிகள்:-</u>

1) அரசு ஆணைப்படி ஏற்கனவே அரசால் தோற்றுவிக்கப்பட்ட 4 கண்காணிப்பு விசாரணைப் பிரிவுகள் Scheduled Tribe சாதிசான்றுகள் சரிபார்த்தல் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளும்.

2) கூடுதல் காவல்துறை இயக்குநரின் கீழ் செயல்படும் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவில் உள்ள 38 பிரிவுகளில் (31 பிரிவுகள் மாவட்டங்களிலும் 7 பிரிவுகள் மாநகரங்களிலும்) பணியாற்றும் அலுவலர்கள் இவ்வாணையில் குறிப்பிடப்பட்டு, மெய்த்தன்மை காணப்பெறப்பட்டுள்ள 3,251 நிலுவையிலுள்ள Scheduled Tribe

சாதிச்சான்றுகளின் மெய்த்தன்மையினை சரிபார்க்கும் பணியினை கூடுதலாக மேற்கொள்வார்கள். இவர்கள் அனைவரும் Scheduled Tribe சான்றுகளை விசாரணை செய்யும் கண்காணிப்பு அலுவலர்களாக அழைக்கப்படுவார்கள்.

3) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையால் Scheduled Tribe சாதிச்சான்றுகள் மெய்த்தன்மை காண, கண்காணிப்பு விசாரணை பிரிவுகளுக்கு அனுப்பப்படும் கோப்புகள் குறித்த நகல்கள் இயக்குநர், பழங்குடியினர் நலம் மற்றும் கூடுதல் காவல்துறை இயக்குநர், சமூக நீதி மற்றும் மனித உரிமை பிரிவு அவர்களுக்கு கண்காணிப்பு பிரிவுகளின் செயல்பாடுகளை கண்காணிக்கும் பொருட்டு அனுப்ப வேண்டும்.

4) சம்மந்தப்பட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அல்லது மாநகர காவல் உதவி ஆணையர், குழுவின் தலைவராக இருப்பார்.

(i) கண்காணிப்பு குழுவின் ஆய்வாளர்கள் அல்லது உதவி ஆய்வாளர்கள் விண்ணப்பதாரரின் உள்ளூர் வசிப்பிடம், அவரது சொந்த ஊர் மற்றும் அவர் வழக்கமாக வசிக்கும் இடத்திற்கு செல்ல வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர் வேறொரு நகரம் அல்லது மாநகரத்திற்கு இடம்பெயர்ந்துள்ள நேர்வில் அவர் முன்பிருந்த/முன்னர் வசித்த இடத்திற்குச் சென்று விசாரணை செய்ய வேண்டும்.

(iii) விண்ணப்பதாரரால் அல்லது பெற்றோரால் அல்லது காப்பாளரால் கோரப்பட்ட சமுதாய நிலை குறித்த அனைத்து தகவல்களையும் நேர்விற்கேற்ப, கண்காணிப்புப் பிரிவு விசாரணை அலுவலர் வெளிப்படையான முறையில் ஆய்வு செய்து சேகரிக்க வேண்டும்.

(iv) தனியர், தனியரின் சகோதர சகோதரிகள் மற்றும் பெற்றோர்களின் பள்ளி பதிவுருக்கள், பிறப்பு குறித்த பதிவு ஆகியவற்றின் ஆவணங்களை உரிய அலுவலகத்தில் சரிபார்த்து, அவற்றின் பிரதிகளைப் பெற வேண்டும்.

(v) அவர்களது சாதி / இனம் தொடர்பாக, வெளிப்படையான முறையில் சரிபார்த்து விண்ணப்பதாரரின் பெற்றோர் அல்லது காப்பாளர்களையும் அவர் விசாரிக்க வேண்டும், விண்ணப்பதாரரின் சமுதாய நிலை குறித்து அறிந்துள்ள ஏனைய நபர்களையும் அவர் விசாரித்து, விண்ணப்பப் படிவத்தில் கருதப்பட்டுள்ளவாறான/கோரப்பட்டுள்ளவாறான அனைத்து விவரங்களையும் சேகரிக்க வேண்டும்.

(vi) கண்காணிப்பு அலுவலர்கள் கள ஆய்வின் போது தனியருக்கு தனது இனம் குறித்து நிரூபிக்கும் சாட்சியங்களை அளிக்க போதுமான வாய்ப்பினை தனியருக்கு வழங்க வேண்டும்.

(vii) பழங்குடியினரின் விந்தையான / தனியியல்பான மானுடவியல் மற்றும் இனம் சார்ந்த பண்புகள், தெய்வம், சடங்குகள், பழக்கவழக்கங்கள், திருமணமுறை,

ஈமச்சடங்குகள், இறந்தவர் உடலை தகனம் செய்யும் முறை போன்றவைகளை அந்தந்த மாவட்டம் அல்லது அருகில் உள்ள மாவட்டத்தின் கல்வி நிலையங்களில் உள்ள மானுடவியல் நிபுணர் உதவியுடன் சேகரிக்க வேண்டும். தாங்கள் மேற்கொண்ட விசாரணையின் அறிக்கையினை காவல் துணை கண்காணிப்பாளர் அல்லது உதவி ஆணையர் மூலமாக வாரத்திற்கு குறைந்தபட்சம் 2 அறிக்கைகள் என்கிற அளவில் மாதத்திற்கு 10 அறிக்கைகளுக்கு குறையாமல் பழங்குடியினர் நல இயக்குநர் அவர்களுக்கு அளிக்க வேண்டும்.

(viii) கண்காணிப்பு விசாரணை பிரிவு அலுவலர்கள் தாங்கள் மேற்கொள்ளும் பணியின் விவரத்தினை கூடுதல் காவல் துறை இயக்குநர் அவர்களுக்கு கடிதம் வாயிலாக தெரிவிக்க வேண்டும்.

(ix) அரசால் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ள 3,251 விசாரிக்கப்படுவதற்காக நிலுவையிலுள்ள Scheduled Tribe சாதிச்சான்றுகளின் மெய்த்தன்மையினை சரிபார்க்கும் பணியினை சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவில் உள்ள 38 பிரிவுகள் மற்றும் ஏற்கனவே உள்ள 4 கண்காணிப்பு விசாரணை பிரிவு அலுவலர்களும் மேற்கொள்வார்கள்.

| வ. எண் | மாவட்டங்கள் | மாநில கூர்நோக்கு குழுவில் தற்பொழுது நிலுவையிலுள்ள இனங்கள் |
|---|---|---|
| 1. | சென்னை | 233 |
| 2. | சேலம் | 383 |
| 3. | திருச்சி | 280 |
| 4. | மதுரை | 307 |
| 5. | காஞ்சிபுரம் | 126 |
| 6. | விழுப்புரம் | 126 |
| 7. | கடலூர் | 42 |
| 8. | வேலூர் | 170 |
| 9. | கிருஷ்ணகிரி | 59 |
| 10. | தருமபுரி | 228 |
| 11. | நாமக்கல் | 103 |
| 12. | புதுக்கோட்டை | 18 |
| 13. | தஞ்சாவூர் | 76 |
| 14. | நாகப்பட்டினம் | 52 |
| 15. | திருவாரூர் | 35 |
| 16. | ராமநாதபுரம் | 5 |
| 17. | விருதுநகர் | 34 |
| 18. | சிவகங்கை | 26 |
| 19. | திருநெல்வேலி | 175 |
| 20. | தூத்துக்குடி | 85 |
| 21. | திருவள்ளூர் | 88 |

13

| | | |
|---|---|---|
| 22. | திருவண்ணாமலை | 78 |
| 23. | கோயம்புத்தூர் | 107 |
| 24. | திருப்பூர் | 53 |
| 25. | ஈரோடு | 34 |
| 26. | பெரம்பலூர் | 5 |
| 27. | தேனி | 31 |
| 28. | திண்டுக்கல் | 166 |
| 29. | நீலகிரி | 58 |
| 30. | கரூர் | 13 |
| 31. | அரியலூர் | 21 |
| 32. | கன்னியாகுமரி | 34 |
| | **மொத்தம்** | **3251** |

(x) ஏற்கெனவே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நலத்துறையால் நான்கு மண்டல கண்காணிப்பு பிரிவுகளுக்கு, Scheduled Tribe சாதிச்சான்று மெய்த்தன்மை குறித்து அனுப்பப்பட்ட இனங்களுடன் தற்போது அனுப்பப்பட உள்ள இனங்களையும் சேர்த்து மொத்தம் மேலே குறிப்பிடப்பட்டுள்ள 3,251 இனங்களை அந்தந்த மாவட்டத்தில் உள்ள சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவில் உள்ள 38 (31 பிரிவுகள் மாவட்டத்திலும் மற்றும் 7 பிரிவுகள் மாநகரங்ளிலும்) பிரிவு அலுவலர்களும், 4 மண்டல கண்காணிப்பு விசாரணைப் பிரிவுகளும் சேர்த்து மொத்தம் 42 கண்காணிப்பு பிரிவுகளுக்கு ஏற்கெனவே அரசால் தோற்றுவிக்கப்பட்டுள்ள நான்கு மண்டல கண்காணிப்பு விசாரணை பிரிவில் பணிபுரியும் காவல் துணை கண்காணிப்பாளர்களால் சமமாகப் பிரித்து அனுப்பப்பட வேண்டும். அவற்றின் நகல் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மற்றும் பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுப்ப வேண்டும்.

(xi) Scheduled Tribe சாதிச்சான்று மெய்த்தன்மை இனங்கள் குறைவாக உள்ள மாவட்ட கண்காணிப்பு விசாரணை பிரிவு அலுவலர்களுக்கு, அருகில் அதிகமாக உள்ள மாவட்டங்களிலிருந்து சமூக நீதி மற்றும் மனித உரிமை பிரிவின் கூடுதல் காவல் துறை இயக்குநர் மற்றும் 4 மண்டல கண்காணிப்பு விசாரணை பிரிவுகளுடன் கலந்தாலோசித்து பழங்குடியினர் நல இயக்குநர் பகிர்ந்து அளிக்க வேண்டும். ஒவ்வொரு கண்காணிப்பு விசாரணை பிரிவுகளும் குறைந்தபட்சம் (மொத்தம்) 80 Scheduled Tribe சாதிச்சான்றுகளை விசாரணை செய்து அறிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். மேலும், அறிக்கைகள் அனுப்பப்பட்ட விவரத்தை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் துறை, இயக்குநர், பழங்குடியினர் நலம் மற்றும் கூடுதல் காவல்துறை இயக்குநர், சமூக நீதி மற்றும் மனித உரிமை பிரிவு அவர்களுக்கு கடிதம் வாயிலாக தெரிவிக்க வேண்டும்.

(xii) மேற்காணும் பணியினை விரைவாக முடிக்கும் பொருட்டு சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவில் உள்ள 38 பிரிவுகள் மற்றும் 4 மண்டல கண்காணிப்பு விசாரணை பிரிவுகளில் அவ்வப்போது ஏற்படும் காலிப் பணியிடங்களை உடனுக்குடன் நிரப்புமாறும் / அந்தந்த மாவட்டத்தில் உள்ள காவல்துறை

கண்காணிப்பாளரின் கீழ் பணிபுரியும் உரிய அலுவலர்களைக் கொண்டு மேற்காணும் பணியினை கூடுதலாக மேற்கொள்ள கூடுதல் காவல்துறை இயக்குநர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

5) கண்காணிப்புப் பிரிவு அலுவலரிடமிருந்து பெறப்பட்ட அறிக்கையின் படி மனுதாரர் அல்லது தனியரது சமூக நிலைக்கான கோரிக்கை உண்மையற்றது அல்லது சந்தேகத்திற்குரியது அல்லது தவறாகக் கோரப்பட்டது என பழங்குடியினர் நல இயக்குநர் கண்டறியும் நிலையில், அவர் விண்ணப்பதாரருக்கு கண்காணிப்பு விசாரணை பிரிவு அலுவலரின் அறிக்கை மற்றும் பல்வேறு ஆவணங்களின் நகலுடன் காரணம் கேட்பு குறிப்பாணையினை, விண்ணப்பதாரர் பயிலும் அல்லது பணிபுரியும் சம்பந்தப்பட்ட கல்வி நிலையம், பணியாளர்ளைத் தெரிவு செய்யும் நிறுவனங்கள், பணிபுரியும் நிறுவனத்தின் தலைவர் மற்றும் துறைத் தலைவர் மூலமாக அல்லது உரிய ஒப்புகையுடன் பதிவஞ்சல் வாயிலாக தனியருக்கு அளிக்க வேண்டும். குறிப்பாணை கிடைக்கப் பெற்ற நாளிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் அல்லது தனியர் / மனுதாரரால் கேட்டுக் கோரிக்கை விடுக்கும் நேர்வில், குறிப்பாணை கிடைக்கப் பெற்ற நாளிலிருந்து 30 நாட்களுக்குள் விளக்கப் பதிலினை அளிக்க வேண்டும். விண்ணப்பதாரர் தனது வாதத்தை நேரில் ஆஜராகி முன் வைக்க அல்லது விசாரணை வாய்ப்பு கோரும் நேர்வில் அது குறித்த வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். அத்தகைய முறையீட்டை/பதிலைப் பெற்றதன் பேரில், பழங்குடியினர் நல இயக்குநர் மாநில கூர்நோக்கு குழுவைக் கூட்டுவார். மாநில கூர்நோக்கு குழுவானது விண்ணப்பதாரர் அல்லது அவரது பெற்றோர் அல்லது காப்பாளரின் கோரிக்கைக்கு ஆதரவான அனைத்து சான்றுகளையும் எடுத்துக்கூற நியாயமான வாய்ப்பை அளிக்கும். நேரிடையாகவோ அல்லது வழக்குரைஞர் வாயிலாக அத்தகைய வாய்ப்பு அளிக்கப்பட்ட பின்னர், விண்ணப்பதாரரால் அல்லது எதிராளரால் எழுப்பப்பட்ட கோரிக்கைகளுக்கு எதிரான மறுப்புரைகளை கருதிப்பார்த்து, மாநில கூர்நோக்குக் குழு அனைத்து ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களின் அடிப்படையில் சுருக்கக் காரணங்களுடன் உரிய ஆணை ஒன்றை வழங்கும்.

6) மேற்படி அலுவலரிடமிருந்து அறிக்கை பெறப்பட்ட பின்பு பழங்குடியினர் நல இயக்குநர், பழங்குடியினரின் சாதிச்சான்று "உண்மைத்தன்மை இல்லாமல்" அல்லது "சந்தேகத்திற்குரியது" அல்லது "தவறாக உரிமை கோரியிருந்தால்" மேலே பத்தி 5–இல் கொடுக்கப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் மற்றும் இறுதி அறிக்கையை மாநில கூர்நோக்குக் குழுவிற்கு, தனியருக்கு அனுப்பப்பட்ட குறிப்பாணையின் மீதான விளக்கம் பெற்றபின் 15 முதல் 30 நாட்களுக்குள் அளிக்க வேண்டும். Scheduled Tribe சாதிச்சான்று "உண்மைத்தன்மை" / "உண்மையாக" இருந்தால் இறுதி அறிக்கையை மாநில கூர்நோக்குக் குழுவிற்கு 5 நாட்களுக்குள் அளிக்க வேண்டும்.

7) இதனைத் தொடர்ந்து, மாநில கூர்நோக்கு குழு தனியரை விரிவான விசாரணைக்கு உட்படுத்தி அவரின் Scheduled Tribe சாதிச்சான்று தொடர்பாக இறுதி முடிவெடுத்து உரிய ஆணை வெளியிடும்.

5. மேலே குறிப்பிடப்பட்டு நிலுவையில் உள்ள 3,251 Scheduled Tribe சாதிசான்றுகளின் மெய்த்தன்மை சரிபார்த்தல் பணிகள் முடிவடைந்த பின்பு அரசால் ஏற்கனவே தோற்றுவிக்கப்பட்ட 4 கண்காணிப்பு விசாரணை பிரிவுகள் தொடர்ந்து செயல்படும். சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவுகளில் உள்ள அலுவலர்கள் இப்பணியில் இருந்து விடுவிக்கப்படுவார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ப. அண்ணாமலை,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
கூடுதல் தலைமைச் செயலாளர், உள், மதுவிலக்கு (ம) ஆயத்தீர்வை துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 9.
முதன்மை செயலாளர் / வருவாய் நிர்வாகம் ஆணையர்,
வருவாய் நிர்வாக ஆணையரகம், சேப்பாக்கம், சென்னை – 5.
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம் சென்னை–5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை–5.
காவல்துறை இயக்குநர், மயிலாப்பூர், சென்னை–4.
கூடுதல் காவல்துறை இயக்குநர்,
சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு, மயிலாப்பூர், சென்னை–4.
அனைத்து தலைமை துறைகள்.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
இயக்குநர், பழங்குடியினர் ஆய்வு மையம், உதகை–4.
செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை – 3.
ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, கிண்டி, சென்னை – 32.
இயக்குநர், பள்ளி கல்வி இயக்ககம்/ கல்லூரி இயக்ககம் / மருத்துவம் இயக்ககம், சென்னை.
பதிவாளர், சென்னை / மதுரை காமராஜர் / மனோன்மணி சுந்தரனார் / பெரியார் / பாரதியார் / பாரதிதாசன் / அழகப்பா / அண்ணாமலை / அண்ணா / திருவள்ளூர் / தமிழ் / தமிழ்நாடு வேளாண்மை / தமிழ்நாடு கால்நடை மற்றும் அறிவியல் / டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவம் / பல்கலைக்கழகம்.
இயக்குநர், ஆசிரியர் தேர்வாணையம், சென்னை.
இயக்குநர், சீருடை பணியாளர் தேர்வாணையம், சென்னை.

நகல்
செயலர், முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
அனைத்து தலைமைச் செயலக துறைகள், சென்னை – 9.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
ஆதி(ம)பந (சாமெ.2, சாமெ.3, சா.மெ–4) துறைகள்.
இருப்புக்கோப்பு / உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

28/07/2017
பிரிவு அலுவலர்.
28/7/2017